R4871 **THE CHRISTIAN ATTITUDE IN THE DUTIES OF LIFE**

வாழ்க்கையின் கடமைகளில் கிறிஸ்தவனின் மனப்பாங்கு

"(அலுவலில்) அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்." ரோமர் 12:11

அலுவல் என்ற வார்த்தை மிகவும் பரந்த அர்த்தமுடையது. நாம் எதைச் செய்தாலும் சகலத்தையும் கர்த்தருக்கென்று செய்ய வேண்டும். கிறிஸ்தவனுக்கு வாழ்க்கையின் பிரதானமான வேலை தேவனை மகிமைப்படுத்துவது, கர்த்தரின் இயக்கத்திற்கேற்ப, அவருக்கு ஊழியம் செய்வது, சகோதரர்களுக்கு ஊழியம் செய்வது, சத்தியத்துக்கு ஊழியம் செய்வது, நீதிக்காக ஊழியம் செய்வது, அவனுக்கு கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக, "யாவருக்கும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மை செய்வது" ஆகும். நமது வசனத்தில் உள்ள அலுவல் என்ற வார்த்தை கர்த்தர் அங்கீகரிக்கிற எந்த வகையான வேலையை, தொழிலைக் குறிக்கும். மதுபான தொழிலில் அல்லது புகையிலை தொழிலில் அசதியாயிராதீர்கள் என்று நாம் சொல்லக்கூடாது. கர்த்தரின் அங்கீகாரம் இருக்கிறது என்று நாம் நம்புகிற தொழிலில் தான் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

"அசதியாயிராமல்" என்கிற வார்த்தை சோம்பலாயிராதே என்பதற்கு சமமானது. எந்த காரியமும் சரியானபடி செய்யப்பட வேண்டும். அது யாருடைய கடமையாக அல்லது சலுகையாக இருக்கிறதோ அதை அவன் அறிவுடனும் சுறு சுறுப்பாகவும் மிகுந்த கவனத்துடனும் செய்ய வேண்டும் என்பதே அப்போஸ்தலருடைய எண்ணமாக தெரிகிறது. செய்வது பிரயோஜனமானது என்றால் அந்த பிரயோஜனமானது வைராக்கியத்துடனும் நன்றாகவும் செய்யப்பட வேண்டும். நமது தொழில் பிரயோஜனமானதா என்பதை நாம் முதலில் பார்க்க வேண்டும் என்பது அப்போஸ்தலரின் கருத்தாக இருக்கிறது. இரண்டாவது அதை உண்மையுடன் தொடர்ந்து நடத்த வேண்டும். நமது சொந்த தேவைக்கோ அல்லது கர்த்தருடைய வேலைக்கோ பணம் கொடுக்கக்கூடியதாக இருந்தால் அந்த தொழில் சக்தியுடனும் சுறுசுறுப்புடனும் அவருக்கு செய்வது போல செய்ய வேண்டும். நாம் எந்த வழியிலும் அசதியாகவோ, சோம்பலாகவோ இருக்கக்கூடாது.

நமது உலக சம்பந்தமான தேவைகளுக்கு நமக்கு பணம் தேவைப்படுகிறது. அதற்கு எவ்வளவு மணி நேரம் ஒதுக்க வேண்டும் என்பது தனிப்பட்டவர்களை பொருத்து இருக்கிறது. ஒவ்வொன்றும் எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டும் என்று அவனே தீர்மானிக்க வேண்டும். நமது ஜீவனை கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுக்கிறேன் என்று அவரிடத்தில் அர்ப்பணம் செய்த பிறகு நாம் கொடுக்க வேண்டியது குறைவாகவே இருக்கும். நாம் "காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ள" பார்க்க வேண்டும். இந்த வாழ்க்கையில் வேலைகளிலிருந்து முடிந்தவரை நியாயமான நேரத்தை சத்தியத்தை அறிவிக்கும் விசேஷித்த ஊழியத்துக்கு ஒதுக்க வேண்டும். இதற்கு நமது குடும்பத்தை மற்றவர்களது பொறுப்பில் விட்டு விட வேண்டும் என்று பொருளல்ல. நாம் அவர்களை சரியானபடி கவனித்துக்கொள்ள வேண்டும். நாம் அதிக பாரத்தை சுமக்கக் கூடாது. நம்மை சார்ந்து இருக்கிறவர்களுக்கு சரியான கவனிப்பை கொடுக்க வேண்டும். உணவும் உடையும் போதுமான அளவில் கிடைத்தால் திருப்தி அடைய வேண்டும். வாழ்க்கையின் நீண்ட காலத்திற்கு சேர்க்க விரும்பக்கூடாது.

அனல் என்ற வார்த்தை சூடான, கொதிக்கக்கூடிய என்பதை குறிக்கிறது. நாம் எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று செய்வது போல இருதயப்பூர்வமாக. நமது முழு பலத்தோடு செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். வேலையை எடுத்துக்கொண்டவர் அந்த வேலையை அக்கறையில்லாமல் அசதியாக செய்பவரானால் அந்த வேலை அவரை வாழ்க்கை முழுவதும் இழுத்துச் செல்லும். நாம் எதைச் செய்தாலும் சூட்டோடு செய்ய வேண்டும். நாம் கர்த்தருடையவர்கள், நாம் என்ன தொழில் செய்தாலும் அது கர்த்தருடையது. நாம் நமது வேலைகளில் உற்காசத்துடன் இருந்தால் தேவன் அதில் பிரியப்படுவார். மனசாட்சிக்கு எதிரான வேலையில் ஒருவர் இருந்தால் அதை அவர் விட்டு விட்டு வேறு வேலையை உலகில் பார்க்க வேண்டும்.

ஆர்வத்துடன் அதிக சுமையை எடுத்துக்கொள்ளக்கூடாது

கர்த்தருடைய பிள்ளை கவலைப்படக்கூடாது அல்லது நாளையைப் பற்றி கவலைப்படக்கூடாது. எனினும் நண்பர்களுக்கும் அண்டை வீட்டாருக்கும் தேவைப்படும் போது கொடுப்பதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. தற்கால உடன் தேவைகளுக்கு எல்லா வளங்களையும் பயன்படுத்தி விடக்கூடாது. நமது சுய கட்டுப்பாட்டை பயன்படுத்தி எதிர்காலத்தில் நல்ல பலன் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஒழுங்கு, உணவு மற்றும் ஆடைகளுக்கும் பொருந்தும். பொருட்களை வைக்கும் அறை சிறியதாக இருந்தால், அடுத்த ஆடைத் தொகுதி எங்கிருந்து வரும் என்று ஆச்சரியப்படக்கூடாது. இன்னொரு ஆடைத் தொகுதியை பெற்றிருந்தால் அது திருடப்படலாம். நாம் சத்தியத்தை ஏற்றுக்கொண்டால், அண்டை வீட்டாரும் நண்பர்களும் எனக்கு எதிராக திரும்பினால் நான் என்ன செய்வேன் என்று ஆச்சரியப்படக்கூடாது. சத்தியத்தினிமித்தம் நான் அவமதிப்பு அடைந்தால் என்ன செய்வது? இவை எல்லாவற்றையும் கர்த்தரிடம் விட்டு விட வேண்டும். நமக்கு துன்பங்கள் தேவைப்பட்டால், அவை நமக்கு வரும்படி அவர் செய்வார் என்று நாம் நம்பிக்கைக்கொள்ள வேண்டும். இந்த வழியில் சத்தியத்தை நமக்கு பிரயோஜனமாயிருக்கும்படி நம்மை தெரிந்துக்கொண்டதற்கு நாம் சந்தோஷப்பட வேண்டும். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோத்தேயு 3:12)

மறுபுறம் தேவன், நாம் வாழ்க்கையில் அக்கறையில்லாமல் செல்ல வேண்டும், அதிர்ஷ்டம் உள்ளவன் சந்தோஷமாக இருக்கட்டும் என்றும் தேவன் நோக்கங்கொள்ளவில்லை. நாளுக்கான சரியான எண்ணத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். இன்றைக்கான கடமைகள் என்ன? கவனிக்க வேண்டியது என்ன? வேதவாக்கியங்கள் கூறுவது போல, "அசதியாயிராமல்

ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் பண்ணுங்கள்." அதிக வைராக்கியம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாளைக்கு நடப்பதைப் பற்றி கவலைப்படாமல், நாளைக்கு தேவன் நம்மோடிருப்பார், நமக்கு தேவையான கிருபையை அளிப்பார் என்று விசுவாசிக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்துடன் வாழ்ந்தால், ஒவ்வொரு நாளைக் குறித்து சிந்திக்கக்கூடிய பெரிய விஷயங்களை பெற்றிருப்போம். நாளைப் பற்றி கவலைப்பட அவசியமாயிருக்காது. நாம் செய்வதற்கு நிறைய இருக்கிறது. தற்கால கஷ்டங்களுக்கு அக்கறை செலுத்தி, கிருபாசனத்திற்கு செல்வோமானால் இன்றைய உதவிக்காக கிருபையும் பலத்தையும் பெறுவோம்.

நமது இருதயத்தின் சிந்தனை, கர்த்தருக்கான ஊழியம், நீதியை ஊக்குவித்தல் மற்றும் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற ராஜ்யத்தை அடைதல் போன்றவையாக இருந்தால், நாம் எதிர்காலத்தை பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம் என்று நமக்கு கர்த்தர் உறுதியளிக்கிறார். நாம் அவரது சீஷர்களாக அனுதினமும் தேவையான சோதனைகளையும் மற்றும் துன்பங்களையும் பெறுவோம். "இடுக்கமான பாதையில்" செல்ல நாம் நாடுவதால் மணவாளனின் கரங்களில் நாம் சாய்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும். அந்தந்த நாளுக்குரிய பாடுகள் போதும். அனுதினமும் நமக்கு தேவையான கிருபை நமக்கு கிடைக்கும் என்ற வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

தேவனுடைய அர்ப்பணம் செய்த ஜனங்கள் கர்த்தருக்கு ஊழியம் பண்ணுவது பெரிய சலுகை. நாம் எந்த அளவுக்கு பூமிக்குரிய காரியங்களை தியாகம் செய்கிறோம் என்று பார்க்கிறார், அப்பொழுது நாம் "நன்றாய் செய்தாய்" என்ற வார்த்தையை கேட்போம், அவரது அங்கீகாரத்தை பெறுவோம்.

ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடுகிற அர்ப்பணம் செய்த அனைவரும் கர்த்தருடைய வேலையில் வைராக்கியமும் செயல்களும் உள்ளவர்களாக காணப்படுவார்கள். நாம் ஒதுக்கக்கூடிய அல்லது தவிர்க்கூடிய உலக அக்கறை மற்றும் வில்லகங்களின் கீழே நமது ஒன்று அல்லது அநேக தாலந்துகளை புதைத்து வைத்தோமானால், உலகப்பிரகாரமான நம்முடைய அல்லது குடும்பத்தின் குறிக்கோள்களின் கீழாக புதைத்து வைத்தோமானால், அல்லது நமது அர்ப்பணம் பண்ணப்பட்ட காலத்தை விஞ்ஞானம், தத்துவம், இசை அல்லது கலை அல்லது தொழில், அரசியல் அல்லது சந்தோஷங்கள், ஆடம்பரம், உணவு ஆகியவைகளில் வீணடித்தால், விசுவாசமற்ற ஊழியக்காரர்களைப் போல நாம் சீக்கிரத்திலோ பின்னரோ "புறம்பான இருளுக்கு" செல்வோம்.